மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்
முன்னிலை திரு.M.சிவராஜேஷ், B.B.A.L.L.B.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.
2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.303/2025
in
அ.வ எண்.25/2024

எவிட்டா ராணி ......... மனுதாரர்/வாதி

/ எதிர் /

1. ஜான்
2. திரு. வட்டாட்சியர் அவர்கள்
வட்டாட்சியர் அலுவலகம்
3. திரு. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
கோரம்பள்ளம் .......... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 14.10.2025 இன்று இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.வில்லின் பெலிக்ஸ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பாலகணேஷ் அவர்கள் ஆஜராகியும், 2, 3எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

இம்மனுவானது தான் சீர்திருத்த விபரத்தில் கோரியபடி பிராதினை சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம்:–**

2.1 தாவா வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்பாத்திய கோரிக்கை பரிகாரம் கோரி வழக்கினை நடத்தி வருகின்றனர். மேலும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி எதிர்பாத்திய கோரிக்கை அவருக்கு பாத்தியப்பட்ட நடைபாதையை மனுதார்/வாதி ஆக்கிரமித்து முள்கம்பி வேலி அமைத்துள்ளதாக

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.10.14 17:36:34 +0530

கூறியுள்ளார். பிராது தபசில் சொத்து மனுதாரர்/வாதியின் தனித்த ஆளுகையிலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது. அதனால் பிராது தபசில் சொத்தினைப் பொறுத்து வாதி விளம்புகை பரிகாரம் கேட்டு பிராதினை சீர்திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. மனுதாரர்/வாதி கோரும் சீர்திருத்தமானது வழக்கின் தன்மையையோ, வழக்கு மூலத்தையோ எந்த காலத்திலும் மாற்றக் கூடியதல்ல. இதனால் பிரதிவாதிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. மனுதாரர்/வாதி தாக்கல் செய்யும் சீர்திருத்த மனுவினை வாங்கி அங்கீகரித்துக் கொள்ளாவிடில் மனுதாரர்/வாதிக்கு பெருத்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும் என மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை இல்லை என்றும் நீதிமன்றம் நீதியின்பால் முடிவு செய்யலாம் என்று மேலெழுத்து செய்யப்பட்டது.

4. இம்மனுவில் தீர்மானிக்க படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சியம், சான்றாவணங்கள் இல்லை.

6. தீர்வு:

மனுவானது தான் சீர்திருத்த விபரத்தில் கோரியபடி பிராதினை சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாவா வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்பாத்திய கோரிக்கை பரிகாரம் கோரி வழக்கினை நடத்தி வருகின்றனர் என்றும் மேலும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி எதிர்பாத்திய கோரிக்கை அவருக்கு பாத்தியப்பட்ட நடைபாதையை மனுதார்/வாதி ஆக்கிரமித்து முள்கம்பி வேலி அமைத்துள்ளதாக கூறியுள்ளார் என்றும் பிராது தபசில் சொத்து மனுதாரர்/வாதியின் தனித்த ஆளுகையிலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றும் அதனால் பிராது தபசில் சொத்தினைப் பொறுத்து வாதி விளம்புகை பரிகாரம் கேட்டு பிராதினை சீர்திருத்தம் செய்ய வேண்டியுள்ளது என்றும் மனுதாரர்/வாதி கோரும் சீர்திருத்தமானது வழக்கின் தன்மையையோ, வழக்கு மூலத்தையோ எந்த காலத்திலும் மாற்றக் கூடியதல்ல என்றும் இதனால் பிரதிவாதிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்றும் மனுதாரர்/வாதி தாக்கல் செய்யும் சீர்திருத்த மனுவினை வாங்கி அங்கீகரித்துக்

SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.10.14 17:36:42 +0530

கொள்ளாவிடில் மனுதாரர்/வாதிக்கு பெருத்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும் என்று கூறியுள்ளதை கருத்தில் கொண்டும் இரு தரப்பினருக்கும் தங்களது வழக்கினை நிரூபிக்க ஒரு வாய்ப்புகொடுக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மனுதாரரின் மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,**

**இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ம் நாள் செவ்வாய்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.10.14 17:36:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.10.14 17:36:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தான்குளம்.
இ.ம.எண்.303/2025இன்
அ.வ.எண்.25/2024
நேரிய/வரைவுஉத்தரவு
நாள் 14.10.2025